செய்தி வெளியீடு எண்:1059 நாள்:08.11.2021

## செய்தி வெளியீடு

### சென்னையில் மழைநீரால் சூழப்பட்ட சாலைகள் சுரங்கப்பாதைகள் ஆகியவற்றை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்

சென்னையில் கடுமையான மழை பெய்து வருவதால் நெடுஞ்சாலைகளும், சுரங்கப் பாதைகளும் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று (8.11.2021) காலையில் புறப்பட்டு ஒவ்வொரு சாலையாக சென்று நேரில் ஆய்வு செய்தார்.

சென்னை பள்ளிக்கரணை காமாட்சி மருத்துவமனை அமைந்துள்ள ரேடியல் சாலை வழியாக ஆய்வுப்பணியை மேற்கொண்டு பல்லாவரம் - துரைப்பாக்கம் சாலையில் அமைந்துள்ள 16 பாலங்களையும், சிறு பாலங்களையும் ஆய்வு செய்தார். இந்த, சாலைகளில் பாதிப்பு எதுவும் பெரிதாக ஏற்படவில்லை என்பதை உறுதி செய்த அமைச்சர் அவர்கள், சென்னை பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் பகுதியிலுள்ள சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்காமல் உடனுக்குடன் மின் மோட்டார் மூலம் மழைநீர் வெளியேற்றப்படுவதை ஆய்வு செய்தார். மழைநீரை வெளியேற்றும் மின் மோட்டார் திறம்பட செயல்படுகிறதா என்பதை பொறியாளர்கள் மூலம் ஆய்வு செய்ய ஆணையிட்டார்.

நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் திரு.சந்திரசேகரன், கண்காணிப்பு பொறியாளர் திரு.செந்தில், உதவி கோட்டப்பொறியாளர் தாம்பரம், திரு.ஆனந்தராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு கழக பொது மேலாளர் திரு.ஞானசேகரன் ஆகியோர் அமைச்சர் அவர்களுடன் சென்று ஆய்வு பணியை மேற்கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9